# முன்னேஸ்வரத்தில் மாசிமாத பிரம்மோத்சவம்

முன்னேஸ்வரம் பஞ்ச ஈச்சரங்களான முன்னேஸ்வரம்,இராமேஸ்வரம், திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், நகுலேஸ்வரம் என்பனவற்றுள் முன்தோன்றிய ஈச்சரமாக விளங்குகின்றது. முன்னேஸ்வரம் இலங்கையின் வடமேல் மாகாணத்தில் புத்தளம் மாவட்டத்தில் சிலாபம் நகரிற்கு கிழக்காக சிலாபம் குருணாகல் பிரதான வீதியில் இரண்டு கிலோமீற்றர் தொலைவில் அமைந்து விளங்குகின்றது.

சிவாகம விதிப்படி அமையப்பெற்ற இக்கோவிலில் தினமும் ஆறுகாலப் பூஜைகள் நடைபெற்று வருகின்றன.

ஸ்ரீ வடிவாம்பிகா தேவியுடன் உறையும் ஸ்ரீ முன்னைநாதப் பெருமான் வேண்டுவார் வேண்டும் வரமருளும் தெய்வீகப்பொலிவு பெற்று அனைத்து அடியார்களுக்கும் அருள்பாலித்து வருகின்றார்.

வுரலாற்றுக்கு முற்பட்ட காலங்களில் வியாசமுனிவர் காசியிற் செய்த பாபத்தை நீங்கப்பெற்ற பெருமையையும், இராமாயணத்தோடு தொடர்புடையதும், இராமன் இராவண சம்ஹாரத்தினால் ஏற்பட்ட பிரம்மஹத்தி தோஷம் நீங்கப்பெற்ற தலமாகவும் இவ்வாலயம் விளங்குகின்றது.மேலும் சக்திபீடங்களுள் ஒன்றாக விளங்கும் சிறப்பினையும் இவ்வாலயம் பெற்று விளங்குகின்றது.

புராணங்களின் சிறப்பும் புராதனமும் மிக்க இவ்வாலயம் மூர்த்தி, தலம், தீர்த்தம், தோத்திரம், விருட்சம் எனும் ஐவகை புராணச் சிறப்புகள் ஒன்றுசேரப்பட்ட சிறப்பினோடு விளங்கும் பெருமை பெறுகின்றது. இச்சிறப்புகள் முறையே ஸ்ரீ வடிவாம்பிகா சமேத ஸ்ரீ முன்னைநாத சுவாமி மூர்த்தியாகவும் ஸ்ரீ முன்னேஸ்வரம் தலமாகவும் சித்தாமிருத கூபம் முதலாக பதினெண் புண்ணிய தீர்த்தங்கள் சூழப்பெற்றதோடு மாயவனாறு (தெதுறு ஓயா) எனும் தீர்த்தத்தினை உடையதாகவும் புராதன அஸ்வந்த (அரச) மரத்தை நேரிய பார்வை கொண்ட ஸ்தல விருக்ஷமாகவும் வியாசமுனிவர், ஸ்ரீராமர் முதலாக பல்வேறு மஹான்களால் தோத்திரம் செய்யப்பட்ட சிறப்புடனும் விளங்குகின்றது.

இத்தகைய சிறப்புக்களையுடைய இவ் ஆலயத்திற்கு மன்னர்களது திருப்பணியும் சிறப்புப் பெறுகின்றது.

பாரம்பரியமாகவே சீரிய மரபுகளையுடைய இவ்வாலயத்தில் மாசிமாதத்து பௌர்ணமி நாளை இறுதிநாளாகக் கொண்டு கொடியேற்றமாகி ஒன்பது தினங்கள் மஹோத்சவம் நடைபெறுவது வழக்கமாகும்.

நித்ய பூஜைகளில் ஏற்படும் குறைகளை நிவர்த்தி செய்வதற்கும், படைத்தல் முதலான ஐந்தொழில்களையும் உணர்த்துவதற்குமாகவே உத்சவம் நடைபெறுவதனை சிவாகமங்கள் மிகவிரிவாக வலியுறுத்துகின்றன.

அதன்படி இவ்வருடம் தைமாதம் 26ம் திகதிக்கு சரியான 09.02.2011 புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. 13.02.2011 ஞாயிற்றுக்கிழமை மாலை சிவபக்த உற்சவமும், 14.02.2011 திங்கட்கிழமை மாலை திருக்கல்யாண உற்சவமும், 15.02.2011 செவ்வாய்கிழமை மாலை பிக்ஷாடன உற்சவமும் இரவு சப்பறத்திருவிழாவும், 16.02.2011 புதன்கிழமை மாலை பிரதோஷ வீஷேஷ பூஜையைத்தொடர்ந்து வேட்டைத்திருவிழாவும், 17.02.2011 வியாழக்கிழமை காலை மஹோத்சவமும், மாலை ஆனந்த நடராஜப் பெருமானுக்கு 108 சங்காபிஷேகமும் நடைபெறும். 18.02.2011 வெள்ளிக்கிழமை சூர்னோத்சவமாகி தித்தக்கடை எனும் ஊரில் பாரம்பரியமான தொடர்புடைய மாயவனாற்றின் (தெதுறு ஓயா) கிளையாற்றில் பகல் 12.00மணிக்கு தீர்த்தோற்சவமும் விசேட பூஜை

வழிபாடுகளையும் தொடர்ந்து அடியார்களுக்கு அன்னதானம் வழங்குதலையும் தொடர்ந்து சகல வாத்திய நிருத்திய உபசாரங்களுடன் கிராம பிரதக்ஷிணத்தை தொடாந்து ஆலயத்தையடைந்ததும் யாக கும்ப அபிஷேகங்களைத் தொடர்ந்து கொடியிறக்கம், சந்திவிசாஜனம், நிருத்தகீத, துந்துலா, வேதஷோஷம் முதலான உபசாரங்களைத் தொடாந்து சண்டேசுரர் உற்சவம், ஆசர்ய உற்சவம் என்பன இடம்பெறும். 19.02.2011 சனிக்கழமை இரவு அர்த்தஜாமப் பூஜையுடன் வைரவர் சாந்தியும் இடம்பெறும்.

சிவாகம மரபும்,சிறப்பும் மிக்க இம் மஹோத்சவத்தில் அடியார்கள் வழிபட்ட இகபரசுகங்களைப் பெற்றுய்வீரகளாக!